**செய்தி வெளியீடு எண்: 062** **நாள் : 24.01.2014**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் சென்னையில் நடைபெற உள்ள இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் தொடர்பாக, தமிழக அரசின் மீன்வளத்துறை செயலாளர் மைய அரசிலுள்ள அதிகாரிகளுடன் 10.1.2014 அன்று விவாதித்தார். அப்போது இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு இலங்கை சிறைகளில் இருக்கும் தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில், இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை 13.1.2014 முதல் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்குமென தெரிவித்த மத்திய அரசு, தமிழக சிறையில் அடைக்கப்பட்டுள்ள 179 இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது. அதன்படி, தமிழக சிறையிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துவக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.1.2014 அன்று உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகள் காரணமாக 211 தமிழக மீனவர்களையும், காரைக்கால் பகுதியைச் சார்ந்த 22 மீனவர்களையும் இலங்கைச் சிறைகளிலிருந்து விடுவித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், தமிழக மீனவர்களின் 30 மீன்பிடி விசைப்படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தமிழக சிறையிலிருந்து 130 மீனவர்கள் விடுவிக்கப்பட்டதுடன், 18 மீன்பிடி விசைப்படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேலும், 23.1.2014 அன்று 4 மீனவர்களையும், இன்று (24.1.2014) 40 மீனவர்களையும் ஆக மொத்தம் 44 தமிழக மீனவர்களையும், 9 மீன்பிடி படகுகளையும் விடுவித்து இலங்கையிலுள்ள ஊர்காவல்துறை நீதிமன்றம் (Kaytes) உத்தரவிட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தீவிர நடவடிக்கைகள் காரணமாக இன்று (24.1.2014) வரை மொத்தம் 255 தமிழக மீனவர்களும், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 22 மீனவர்களும் இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன் தமிழக மீனவர்களின் 39 மீன்பிடி படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதே போன்று 18 இலங்கை மீனவர்களும் அவர்களது 3 படகுகளும் விடுவிக்கப்பட இன்று (24.1.2014) தமிழக அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மன்னார் நீதீமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 71 மீனவர்களும், தங்களது 15 விசைபடகுகளுடன் இன்று (24.1.2014) இரவு 10 மணி அளவில் காரைக்கால் வந்தடைவார்கள். அதே போன்று 11.12.2013 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, திரிகோணமலை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நாகப்பட்டினத்தைச் சார்ந்த 111 தமிழக மீனவர்களும், தங்களது 15 மீன்பிடி விசைப்படகுகளுடன் இன்று திரிகோணமலையிலிருந்து புறப்பட்டு 25.1.2014 அன்று காரைக்கால் வந்து சேருவார்கள். காரைக்கால் வந்தடையும் தமிழக மீனவர்களை, தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று வரவேற்று, அவர்களை தமிழக அரசின் செலவில், அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

**வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

**நாள்:- 24.1.2014.**